

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதிகுட்பட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை ஏற்பாட்டில் 22.05.2025 அன்று தேனாம்பேட்டையில் அமைந்துள்ள ஹையாட் ரீஜென்சி ஹோட்டலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா,எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் தயாநிதி மாறன்,எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம்விளக்கு தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### எழும்பூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

# 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை புல்தரை கால்பந்தாட்ட ஆடுகளம்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, மே 24-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணிச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, ரெங்காச்சாரி தெரு விளையாட்டு மைதானத்தில் 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட செயற்கை புல்தரை கால்பந்தாட்ட ஆடுகளத்தைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன்; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், தொ.மு.ச. சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சிம்பு என்ற பிரதாப் குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.எம்.ஜெயலெட்சுமி, புஷ்பராஜ், எட்டு என்ற விஜயகுமார், தேவநிதி, அசினா பேகம், வழக்கறிஞர் நேரு பிரபாகரன், முன்னாள் பகுதிப் பிரதிநிதி விஜயகுமார், வட்டத் துணைச் செயலாளர்கள் இந்திராகாந்தி, ஆரோக்கியம்; எல்.குணசேகர், கே.பி.பார்க் சதிஷ், வேலு, விஷால், ராஜ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணிச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, ரெங்காச்சாரி தெரு விளையாட்டு மைதானத்தில் 2022–2023 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட செயற்கை புல்தரை கால்பந்தாட்ட ஆடுகளத்தைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் திறந்து வைத்தார்.

### தி.மு.க மாணவர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க மாணவர் அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26.05.2025 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் **சென்னை ஆர்.கே.சாலையில் அமைந்துள்ள, “ஓட்டல் உட்லண்ட்ஸ்”ல்**, கழகத் துணைப் பொதுச்செயலாளரும் – மாணவர் அணியின் பொறுப்பாளருமாகிய ஆ.இராசா எம்.பி அவர்களின் தலைமையில் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில் குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும் அனைத்து மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் மட்டும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள், மாணவரணியின் ஆக்கப் பணிகள் குறித்த ஆலோசனை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள் : 23.5.2025

**இரா.ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



கழக தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தாயார் மறைந்த பெ.மாரிமுத்து அவர்களின் திருவுருவ படத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையேற்று திறந்துவைத்தார். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை,கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன்,தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.செல்வராஜ், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், ரெ.தங்கம்,தச.எழில், எஸ்.குமார்,புதுவை வீரன் உள்ளிட்ட கழக நிருவாகிகள் புகழஞ்சலி செலுத்தினார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களுக்கு 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**24/05/2025 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| காலை 11:30 மணி | வீட்டுமனைப் பட்டா மற்றும் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்ட அரசாணை வழங்குதல் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| மதியம் 12:30 மணி | புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு. |
| மாலை 04:00 மணி | ‘மிசா’ துரை மாணிக்கம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி | ஏ.என்.எஸ்.பிரைட் ஹோட்டல் மினி ஹால், புதுக்கோட்டை. |
| மாலை 04:30 மணி | மகளிர் சுய உதவிக் குழுவினருடன் சந்திப்பு | 9-ஏ, நத்தம் பண்ணை, புதுக்கோட்டை. |
| மாலை 05:30 மணி | கழக மருத்துவ அணி மாநில கருத்தரங்கம் | பள்ளத்துவயல், திருச்சி பைபாஸ் சாலை, புதுக்கோட்டை. |
| மாலை 06:30 மணி | திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | கல்லுக்குழியல்பட்டி, இளையாவயல், புதுக்கோட்டை. |

**25/05/2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09:30 மணி | கழக இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | கோர்ட் யார்டு ஹோட்டல், திருச்சி. |
| மதியம் 12:30 மணி | ஆர்.சிவராம் பிரசாத் - ஏ.காவ்யா இணையரின் திருமண வரவேற்பு விழா | ஸ்ரீ காமாட்சி மஹால், வேலாயுதம்பாளையம், கரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-05-2025



### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை – எஸ்.மோகன் பங்கேற்பு! 132வது வட்ட

# முன்னாள் அவைத் தலைவர் மு.பாண்டியன் முதலாமாண்டு நினைவு அஞ்சலி!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலஉதவிகள் வழங்குகிறார்!

சென்னை, மே. 24-

தியாகராயர் நகர், 132வது வட்ட முன்னாள் அவைத் தலைவர் மறைந்த மு.பாண்டியன் அவர்களின் முதலாமாண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி - நல உதவிகள் வழங்கல் 25.5.2025 - ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் காமராஜர் காலனி, 9வது தெருவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட துணைச் செயலாளர் கோடம்பாக்கம் மு.சத்தியா,132வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி, 132 ‘அ’ வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா, மாமன்ற உறுப்பினர் கார்த்திகா பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் நலத்திட்ட உதவிகளை சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளாகள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் வழங்குகின்றனர்.



நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை மு.சரவணன், பா.தணிகைமுத்து ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், 132வது வட்ட கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

# பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு!

## 24,504 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி!

சென்னை, மே.24-

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து, அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களிலுள்ள பாசன நிலங்களுக்கு, 20252026ஆம் ஆண்டு முதல் போக பாசனத்திற்கு, 26.05.2025 முதல் 22.09.2025 வரை 120 நாட்களுக்கு 8812.80 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் கோபி செட்டிபாளையம், அந்தியூர் மற்றும் பவானி வட்டத்திலுள்ள 24504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று நீர்வளத் துறை தெரிவித்துள்ளது.



ஆலந்தூர் முன்னாள் மாவட்ட பிரதிநிதி கழக முன்னோடி கி.ரவி நேற்று (23.5.2025) இயற்கை எய்தினார். அவருடைய உடலுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர். உடன் பகுதி செயலாளர்கள் ப.குணாளன், என்.சந்திரன் எம்.சி., மற்றும் ஜெயக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், பூபாலன் சீனிவாசன், முரளி கிருஷ்ணன், அபுதாகிர், கலாநிதி, பாபு குமார், கீர்த்தி ராஜ், வாசிம், ராஜவேல், காமராஜ், ராஜா, ஸ்ரீதர், சகிம்சா, விக்கி, அற்புதராஜ், பிரபாகரன், குமார், சரவணன், துரைவேல், சந்துரு, லட்சுமிபதி, கார்த்திக், திலீப், விஜி, சந்துரு, கிருஷ்ணமூர்த்தி, நெடுஞ்செழியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.